**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.354/2021</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேசுராஜ் | தந்தை பெயர் | : | இன்னாசி |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 30.01.2026

**P.W. : 1**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் ஒரே தெருவில் பக்கத்து வீட்டில் தான் வசிக்கிறார். பிரதிவாதி நடத்துநர் வேலைக்கு தற்காலிக பணிக்கு சென்று வருகிறார். தாவா கிரைய

உடன்படிக்கையில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளவர்கள் ஜேம்ஸ், வேளாங்கண்ணியம்மாள், சூசைமாணிக்கம், சாமிநாதன் ஆகியோர் ஆவார். மேற்படி சாட்சிகளையும், ஜோன்ஸ் என்பவரையும் விசாரித்தால், நான் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்பது தெரிய வரும் என்றால் சரிதான். அவர்களை நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை மூலம் பிரதிவாதி விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. கிரைய உடன்படிக்கையில் உள்ள எண்டார்ஸ்மெண்ட்–ல் கூடுதல் பணம் கொடுத்தது தொடர்பாக சாட்சி போட்டுள்ள நபர்கள் தான் கிரைய உடன்படிக்கையிலும் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 எண்டாஸ்மெண்ட்டை யார் எழுதினார் என்றால் பத்திர எழுத்தர் திருநாவுக்கரசு எழுதினார். நான் தற்சமயம் நிலம் வாங்கி விற்கும் புரோக்கர் வேலை தான் பார்க்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக அதனை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரூ.1 இலட்சம் பணத்தை ரொக்கமாக தான் கொடுத்தேன். ரூ.1 இலட்சம் பணத்தை 22.08.2021 அன்று கொடுத்தேன். வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் உள்ள பிரதிவாதியின் கையொப்பங்களுக்கும் வா.சா.ஆ.2 எண்டார்ஸ்மெண்ட்டில் உள்ள அவரது கையொப்பத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 இல் உள்ள ஜேம்ஸ், மற்றும் சாமிநாதன் என்பவரது கையொப்பங்களுக்கும் வா.சா.ஆ.2 இல் உள்ள அவர்களது கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. இரண்டும் அவர்கள் போட்டது தான். சாதாரணமாக பார்த்தாலே இரண்டு கையொப்பங்களுக்கும் வேறுபாடு தெரிகிறது என்றால் சரியல்ல. கையெழுத்து நிபுணருக்கு மேற்படி ஆவணத்தை அனுப்பி ஒப்பிட்டு பார்க்க

எனக்கு ஆட்சேபனை இல்லை. கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட 90 நாட்களுக்கும் கிரைய பத்திரம் எழுதி தரும்படி பிரதிவாதியிடம் கேட்டேன். அவர் தான் தாமதம் செய்தார். பிரதிவாதி கிரையம் செய்து தர முதலில் தயாராக இருந்தார் என்றும், நான் தான் கால தாமதம் செய்தேன் என்றும், அதனால் பணத்தை பிரதிவாதி என்னிடம் திருப்பி தந்து விட்டார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் நேரடியாக மட்டும் தான் கிரையம் செய்து தர கேட்டேனா என்றால் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பும் அனுப்பினேன். நான் பிரதிவாதியிடம் பணத்தை திருப்பி வாங்கிவிட்டு கிரைய உடன்படிக்கையை திருப்பி தராததால் பிரதிவாதி என் மீது போலீஸில் புகார் கொடுத்தார் என்றால், பணத்தை திருப்பி தரவில்லை. ஆனால் பொய் புகார் கொடுத்தார். புகாரை போலீசார் எவ்வாறு முடித்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி முடித்தார்கள். போலீசார் சாமிநாதன்,ஜேம்ஸ் ஆகியோரை விசாரித்து நான் பிரதிவாதியிடம் பணத்தை வாங்கியதை உறுதி செய்தார்கள் என்றும், அதனால் என்னை அக்ரிமெண்டை பிரதிவாதிக்கு திரும்ப தர சொன்னார்கள் என்றால் சரியல்ல. அதனால் நான் வழக்கறிஞர் மூலம் பொய் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு, கிரைய பத்திரம் எழுதி பெற வேறு முயற்சி செய்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் மொத்தம் ரூ.3 இலட்சம் மட்டும் வாங்கினார் என்றும், அதையும் திருப்பி தந்து விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 எண்டார்ஸ்மெண்ட் மூலம் ரூ.1 இலட்சம் கொடுத்ததாக பொய்யாக எழுதி கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கிய ரூ.3 இலட்சத்தை திருப்பி தந்து விட்டதாக கட்சி செய்கிறார்

என்றால், அது தவறான கட்சி ஆகும்.  நான் பணத்தை திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றும், எனவே கிரைய உடன்படிக்கையை இரத்து செய்து தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.  பொய் வழக்கு நடத்துகிறேன் என்றும், வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது  கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.